**THE LABOUR COURT, SALEM**
**CAMP COURT AT DHARMAPURI**
**I.D.No. 5 of 2020**

**06.02.2026**

**MW3 – திரு. M. துரைராஜ்**

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு

குறுக்கு விசாரணை – (மனுதாரர் தரப்பில்)

நான் ஒழுங்கு நடவடிக்கை பிரிவு கண்காணிப்பாளராக கடந்த 2022ம் வருடம் 9ம் மாதம் முதல் தற்போது வரை பணிபுரிகிறேன். 2009 ம்வருடம் அக்டோபர் மாதம் மண்டல அலுவலகத்தில் வேறு பிரிவில் பணிபுரிந்தேன். 27.10.2009ம் தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட பேருந்தில் தணிக்கையாளர் தணிக்கை செய்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. சான்றாவணங்கள் அடிப்படையில் தெரியும். மனுதாரர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட காலகட்டத்தில் நான் ஒழுங்கு நடவடிக்கை பிரிவில் பணியில் இல்லை என்றால் சரிதான்.

என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ள எதிர்மனுதாரர் தரப்பு ஆவணங்கள் எதிலும் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 27.10.2009ல் பேருந்தை தணிக்கை செய்த தணிக்கையாளர் யார் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தணிக்கையாளரிடமிருந்து மனுதாரருக்கு எதிராக புகார் பெறப்பட்டது என என்னுடைய சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மனுதாரரின் பணிப்பதிவேடு என்னால் எழுதி பராமரிக்கப்படவில்லை

என்றால் சரிதான். மனுதாரரின் முன்பணிக்காலத்தில் தண்டனை வழங்கப்பட்டதாக சொன்ன சமயத்தில் நான் ஒழுங்கு நடவடிக்கை பிரிவில் பணியில் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் ஆவணங்களை சமர்பிக்க தெரிவித்தபோதுதான் ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem